வளன் ஆய்வம்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# விடுதலைப்போரில் சிவகங்கைச் சீமை

**செ.ரோஸ்லின் மேரி**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, தூயவளனார் தன்னாட்சிக்கல்லூரி , திருச்சிராப்பள்ளி.

**ஆய்வுச்சுருக்கம்**

கடலாராய்ச்சி, விண் ஆய்வு, இலக்கியம், ஓவியம், சிற்பக்கலை எனப் பல்துறைகளிலும் தமிழ்ச்சமூகம் அளப்பரிய வெற்றிகளைப் பெற்றிருக்கிறது. இதற்கு எத்தனையோ சான்றுகள் இன்றும் கண்முன் சாட்சிகளாக இருந்துவருகின்றன. அதேபோன்று இந்தப்பூமியில் வீரத்திற்குப் பஞ்சமில்லை என்பதற்குச் சான்றாகப் பலவீரர்கள் இந்த மண்ணில் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். வியாபாரம் செய்யவந்த ஆங்கிலேயர், இம்மண்ணைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ள முயன்றபோது அதை முளையிலேயே கிள்ளி எறிந்தவன் தமிழன். இத்தகைய வரலாற்றுச் சிறப்புகளை இன்றைய தமிழனுக்கு சொல்லியாகவேண்டும். அப்போதுதான் நாளைய தலைமுறை இந்த நாட்டிற்காகத் தன்னை அர்ப்பணிக்கின்ற சூழ்நிலை வரும். இல்லையெனில் காலப்போக்கில் இந்த தேசம் மீண்டும் அந்நியரிடம் அடிமைப்பட நேரிடும். வெள்ளையரின் முதல் எதிர்ப்புக் குரல் தென்தமிழகத்தில்தான் எழுந்தது என்பதற்கு இங்கிருந்த வீரர்களே சாட்சிகளாவர். அவ்வகையில் சிவகங்கை மாவட்டம், இந்திய விடுதலைக்காக ஈன்றளித்த வீரர்கள் பற்றிய செய்திகளை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

**திறவுசொற்கள்**

பிரகடனம், கும்பெனி, வளரி, பிரதானி, தாளவாய், தளகர்த்தர், மாலையீடு, பிரதிநிதி.

**முன்னுரை**

வணிக நோக்குடன் வந்த ஆங்கிலேயர் இந்திய நாட்டையே உரிமையாக்கிக்கொண்டனர். இந்திய நாட்டை அடிமைப்படுத்தியதோடு இம்மண்ணின் மக்களைக் கொடுமைப்படுத்தவும் தொடங்கினர். அதனால் விடுதலைப்போராட்டம் நாடெங்கும் பற்றியெரியத் தொடங்கியது. இதில் தமிழகத்தின் பங்கு தனிச்சிறப்புடையது. வெள்ளையரின் கொடுமையை எதிர்த்துப் பூலித்தேவன், கட்டபொம்மன், வேலுநாச்சியார், மருது சகோதரர்கள் உள்ளிட்ட தென்தமிழகமே கிளர்ந்தெழுந்தது. இவர்கள் அனைவருமே ஆங்கிலேயரை கடுமையாக எதிர்த்து வீரமரணம் அடைந்தவர்கள். இவர்களுள் சிவகங்கைப் பகுதியைச் சேர்ந்த விடுதலைப்போராட்ட வீரர்களின் துணிவையும், தியாகத்தையும், நாட்டுப்பற்றையும் பதிவுசெய்வதாக இக்கட்டுரைஅமைகிறது.

**சிவகங்கை**

சிவகங்கை மாவட்டம் புதிதாக அமைக்கப்பட்டது என்றே பலரும் எழுதியுள்ளனர். சிவகங்கை நகர் அமைந்துள்ள பகுதியில் அந்தணர் குடியிருப்பு ஒன்று இருந்துள்ளது. பல செப்பேடுகள் இந்நகரைச் "சதுர்வேதி மங்கலமான சிவகங்கை" என்று குறிக்கின்றன. இதன்படி இதன் பழம்பெயர் "சதுர்வேத மங்கலம்" என அறியப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு, 'பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்' புதிதாக உதயமானது. புதியதாக உதயமான பசும்பொன் மாவட்டம் பழைய சிவகங்கைச் சீமையின் நிலப்பரப்பை முழுமையாக உள்ளடக்கிய பகுதியாகும். இப்பொழுது இது சிவகங்கை மாவட்டம் என்றே அழைக்கப்படுகிறது.

விடுதலைப்போரில் முதல் களப்பலியான 'முத்துவடுகநாதர்', வாளெடுத்துக் களம் கண்ட முதல் போராட்ட வீராங்கனை 'ராணி வேலுநாச்சியார்', தங்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்று போற்றத்தக்க அளவிற்குத் தாங்கள் வாழ்ந்த காலத்திலேயே சாதனைகள் பல புரிந்து சாதாரண நிலையிலிருந்து அசாதாரண நிலைக்கு உயர்ந்த மாவீரர்கள் 'மருதுபாண்டியர்கள்' ஆகியோர் இந்த மண்ணின் மாண்பை மணம்பரப்பி நிலைக்கச்செய்தவர்களாவர்.

விடுதலைப்போராட்ட வரலாற்றில் மட்டும் சிவகங்கைச் சீமை தனது முத்திரையைப் பதித்ததோடு நின்றுவிடவில்லை. சமுதாய முன்னேற்றம், கல்வி வளர்ச்சி, பெண்ணுரிமை, சாதிஒழிப்பு, சமூகசீர்திருத்தம், தேசிய எழுச்சி ஆகியவற்றிலும் இவ்விடம் சீரிய முன்னணி வகித்து தனிமுத்திரையைப் பதித்துள்ளது.

**அரசு நிலையிட்ட அரசர்**

இராமநாதபுரத்தின் பத்தாவது மன்னனாகச் சூழ்ச்சியின் மூலம் அரியணை ஏறியவன் பவானிசங்கரன். இவனது தொல்லையிலிருந்து விடுபட்டுத் தப்பிச்சென்ற கட்டயத்தேவரும், சசிவர்ணத்தேவரும் தஞ்சாவூரில் சந்தித்து நட்புகொண்டனர்.

சசிவர்ணத்தேவரின் வீரதீரச் செயல்களின் பயனாகக் கட்டயத்தேவர் இராமநாதபுரத்தின் மன்னரானார். இவர் இராமநாதபுரம் அரசை ஐந்து பகுதிகளாகப் பிரித்தார். மூன்று பகுதிகளைத் தான் வைத்துக்கொண்டு, மீதி இரண்டு பகுதிகளைச் சசிவர்ணருக்குக் கொடுத்தார். சசிவர்ணர் தனது குரு சாத்தப்பையாவைச் சந்தித்து அருள்பெற்ற நிகழ்ச்சி சிவகங்கை தீர்த்தக்கரையில் நடைபெற்றதால் தான் புதிதாக அமைத்த நகரத்திற்குச் சிவகங்கை என்றே பெயரிட்டார்.

இராமநாதபுரம் “பெரிய வாடகை” அல்லது “பெரிய மறவர் நாடு” என்றும், சிவகங்கை “சின்ன வாடகை” அல்லது “சிறிய மறவர் நாடு” அல்லது நாலுக்கோட்டைச் சீமை என்றும் அழைக்கப்பட்டது. இராமநாதபுரம் பகுதியிலிருந்து சிவகங்கை பிரிந்ததென்றாலும் அது இராமநாதபுரத்தைக் காட்டிலும் பல்வேறு வளங்களைப் பெற்று சிறந்து விளங்கியது. இப்பிரிவினை 1730 இல் நடைபெற்றது. சேது அரசை மீட்டுச் சரியான மறவர் மரபிற்கு அதை வழங்கியதில் சசிவர்ண பெரியஉடையாருக்குப் பெரும்பங்கு உண்டு. அதனால் அவருக்கு “அரசு நிலையிட்ட அரசர்” என்ற பட்டப்பெயர் எல்லாச் செப்பேடுகளிலும் காணப்படுகிறது. விடுதலைப்போரில் பெரும்பங்கு வகித்த சிவகங்கைச் சீமையை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

**விடுதலைப்போரில் மரணமடைந்த முதல் மன்னர்**

சசிவர்ண பெரியஉடையார் 1750இல் காலமானார். அவருக்குப்பின் அவர் மகன் முத்துவடுகநாதர் சிவகங்கையின் இரண்டாவது மன்னராக ஆட்சிப் பொறுப்பேற்றார்.

இவர் இராமநாதபுரத்தைச் சேர்ந்த வேலுநாச்சியாரைத் திருமணம் செய்துகொண்டார். அரண்மனையில் வெள்ளைமருதுவும், சின்னமருதுவும் பொறுப்பான பணியாட்களாகத் தாண்டவராயப் பிள்ளையால் அமர்த்தப்பட்டார்கள்.

ஒருசமயம் முத்துவடுகநாதரும், மருது சகோதரர்களும் காட்டுக்கு வேட்டையாடச்சென்றனர். சென்றனர். அங்கு வேகமாக வந்த வேங்கை ஒன்று முத்துவடுகர் மேல் பாய, மருதுசகோதரர்கள் அதனைக் கொன்று மன்னனின் உயிரைக் காப்பாற்றினர். மன்னர் அவ்விருவருக்கும் பரிசுகள் வழங்கி மெய்க்காப்பாளர் எனும் பதவிஉயர்வும் அளித்தார். மன்னருக்கு மருதுசகோதரர்கள் இருகண்களாக விளங்கினர். ராணி வேலுநாச்சியார் தம் கணவருக்கு மிகச்சிறந்த ஆலோசகராக விளங்கி வந்தார். அவர் போர்க்களம் சென்று வாள்எடுத்துப் போர்புரியும் ஆற்றலும் வீரப்பயிற்சியும் பெற்று விளங்கினார். 'ஜெரூஸ்-டி-பிரே' எனும் பிரெஞ்சு பாதிரியாரிடம் பிரெஞ்சு மொழியைக் கற்றார். இவ்வாறு ஆட்சிப்பொறுப்பில் தளவாய் தாண்டவராய பிள்ளை, ராணி வேலுநாச்சியார், மருது சகோதரர்கள் ஆகியோர் முத்துவடுகநாதருக்குத் துணையாக இருந்தனர்.

இந்தநிலையில் மன்னர் முத்துவடுகநாதர் ஆற்காட்டு நவாபிற்குக் கப்பம் கட்ட மறுத்ததால் 1772 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25 ஆம் நாள் ஆங்கிலப்படைகளும், ஆற்காடு நவாபின் படைகளும், தொண்டைமானது கூலிப்படைகளும் ஒன்றுசேர்ந்து காளையார் கோயில்மீது பீரங்கிக் குண்டுகளால் தாக்குதல் நடத்தின. அதனால் காளையார் கோயிலின் கோட்டை மதில்கள் இடிந்து வீழ்ந்தன. இறுதியில் சிவகங்கைச் சீமை அரசர் முத்துவடுகநாதரும், அவரது இளையமனைவி கௌரிநாச்சியாரும் அரசரது எண்ணற்ற படைவீரர்களும் அன்னிய ஆதிக்க வெறிபிடித்த கும்பெனிப் படை வீசிய பீரங்கிக் குண்டுகளால் உடல்கள் சல்லடைக் கண்களாகத் துளைக்கப்பட்டு வீரமரணமடைந்து விண்ணுலகெய்தினர். பின்னர் காளையார் கோயில் கும்பெனிப் படைகளால் கொள்ளையிடப்பட்டு சூறையாடப்பட்டது. அக்கொள்ளையின் மூலம் கும்பெனிப் படைகளுக்கு 50,000 பகோடாக்கள் (ஒன்றரை லட்ச ரூபாய்) கிடைத்தன. தமிழகத்தின் மானத்தையும், வீரத்தையும் காப்பதற்கு முத்துவடுகநாதர், கும்பெனிப்படைகளை எதிர்த்துப் போராடி, முதல் புரட்சி செய்து வீரமரணமடைந்து, விடுதலை வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றார்.

முத்துவடுகநாதர் மறைவிற்குப் பிறகு அவரது மனைவி வேலுநாச்சியார், மகள் வெள்ளச்சி நாச்சியார், பிரதானி தாண்டவராய பிள்ளை, மருது சகோதரர்கள் ஆகியோருடன் திண்டுகல்லுக்கு அருகிலுள்ள விருப்பாட்சி என்ற சிற்றூருக்குத் தப்பிச்சென்றனர்.

**வீரமங்கை வேலுநாச்சியார்**

ராணி வேலுநாச்சியார் இராமநாதபுரம் செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதிக்கும், சக்கந்தி முத்தாத்தாள் நாச்சியாருக்கும் 1730 இல் மகளாகப் பிறந்தார். கல்வி கேள்விகளில் சிறந்தவராக வளர்ந்த வேலுநாச்சியார் போர்க்களம் சென்று வாளெடுத்துப் போர்புரியும் ஆற்றலும் பெற்று விளங்கினார். சிவகங்கைச் சீமையின் இரண்டாவது மன்னர் முத்துவடுகநாதருக்கு வேலுநாச்சியார் திருமணம் செய்துவைக்கப்பட்டு அவரது பட்டத்து ராணியானார்.

அரசியலிலும் ஆட்சிப்பொறுப்பிலும் அரசருக்குத் துணையாக இருந்த வேலுநாச்சியார் முத்துவடுகநாதர் இறந்தவுடன் உடன்கட்டை ஏறி தனது உயிரைப் போக்கிக்கொள்ள விரும்பினார். பிரதானி தாண்டவராய பிள்ளை, மருது சகோதரர்கள் வேலுநாச்சியாரைத் சமாதானம் செய்து, இழந்த சீமையை அவர்கள் எவ்வகையிலும் மீட்டுத்தருவதாக ராணிக்கு வாக்குறுதி வழங்கினர். கொல்லங்குடியில் தங்கியிருந்த வேலுநாச்சியார், வெள்ளச்சிநாச்சியார் முதலியோர், பிரதானி தாண்டவராய பிள்ளை, மருது சகோதரர்கள் துணையுடன் மேலூர் வழியாகத் திண்டுக்கல்லுக்கருகில் உள்ள விருப்பாட்சிபாளையத்திற்குத் தப்பிச்சென்றனர்.

“வெள்ளையரை எதிர்த்துப் போர் புரிந்து வீரமரணமடைந்த முத்துவடுகநாதரின் இறப்புப் பற்றி ராணி வேலுநாச்சியாருக்குத் தகவல் தெரிந்ததும் அவர் அதிர்ச்சியுற்றார். உடனே ராணி கொல்லங்குடியிலிருந்து காளையார் கோயில் வந்து சேர்ந்தார். தனது கணவர், தங்கை கௌரிநாச்சியார் ஆகியோரின் ஈமச்சடங்குகளை, ராணி காளையார் கோயிலில் செய்துமுடித்துவிட்டு உடனே விருப்பாட்சி விரைந்தார். அரசர் முத்துவடுகநாதரும், அவரது இளையராணி கொளரிநாச்சியாரும் அருகருகே புதைக்கப்பட்டனர். அவர்களிருவருக்கும் மாலையீடுகள் (அரசர்கள் அடக்கம் செய்யப்படும் இடம்) காளையார் கோயிலில் கட்டப்பட்டன. அந்த மாலையீடுகளில்

அருகருகே துயில் கொள்ளும் அரசர் முத்துவடுகநாதரும், அவரது இளையராணி கௌரிநாச்சியாரும் காளையார் கோயிலின் காவல் தெய்வங்களாக மக்களைக் காத்து வருகின்றனர்". (மு.பாலகிருஷ்ணன், விடுதலைப்போரின் விடிவெள்ளிகள், ப.42) என்ற செய்தி ராணி வேலுநாச்சியாரின் வீரத்திற்கும், ஆட்சி அனுபவத்திற்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. ராணி வேலுநாச்சியார் ஹைதர்அலியின் படைஉதவியை எதிர்பார்த்து எட்டு ஆண்டுகள் விருப்பாட்சிபாளையத்தில் தங்கியிருந்தார். அவருக்கப் பக்கபலமாகப் பெரியமருதுவும், சின்னமருதுவும் துணையாக உடனிருந்தனர். பிரதானியின் மறைவிற்குப் பின்னர் வேலுநாச்சியார் தான் நேரடியாக அரசியல் விவகாரங்களில் ஈடுபடத் தீர்மானித்தார்.

"நாயக்க மன்னர்கள், மதுரையை ஆட்சி செய்தபோது, அவர்கள் காலத்தில் அமைச்சர் மற்றும் தளபதி ஆகிய இரண்டு பதவிகளையும் ஒருவரே வகிக்கும் 'தளவாய்' (DALAVAY) என்றொரு பதவி உருவாக்கப்பட்டது. தளவாய், போர்க்காலங்களில் சேனாதிபதியாகவும் மற்றைய காலங்களில் வெளிவிவகாரங்களைக் கவனிக்கும் அமைச்சராகவும் செயல்பட்டார். அதேபோன்று 'பிரதானி' (PRADHANI) என்றொரு பதவியும் மதுரை நாயக்க மன்னர்களால் உருவாக்கப்பட்டது. அரசு நிதி இலாகா பொறுப்பு மற்றும் வரவு செலவுகளைப் பொறுத்துத் திட்டங்கள் தீட்டுதல் பிரதானியின் கடமையாகும். பழைய இந்து ராஜ்யங்களில் நடைமுறையிலிருந்த முதன்மந்திரி மற்றும் சேனாபதி ஆகிய இரண்டு பதவிகளையும் இணைத்து, 'பிரதானி' என்ற ஒருவரே நாயக்கர் மன்னர்கள் காலத்தில் அரசு நிர்வாகத்தைக் கவனித்த வந்தார். 'ஜான் நியாகாப்' என்ற வரலாற்று அறிஞரும் மற்றும் கிறிஸ்துவ வரலாற்று ஆசிரியர்களும் பிரதானி என்பவரை 'ஒரு ராஜ்யத்தின் கவர்னர் ஜெனரல்' என்றே குறிப்பிடுகின்றனர்." (மு.பாலகிருஷ்ணன், விடுதலைப்போரின் விடிவெள்ளpகள், ப.43) இத்தகைய பொறுப்புகளை வகித்த தளவாய் தாண்டவராய பிள்ளை விட்டுச்சென்ற பணிகளை, குறிப்பாகச் சிவகங்கைச் சீமையின் நாட்டார்களுடன் கொண்ட ஓலைத்தொடர்புகளை ராணி தொடர்ந்து கடைபிடித்து வந்தார். தமது கணவரிடம் மிகுந்த விசுவாசத்துடன் பணியாற்றிய மருதுசகோதரர்களையும் இந்த அரசியல் பணியில் வேலுநாச்சியார் ஈடுபடுத்தினார்.

**ஹைதர் அலியின் உதவி**

விருப்பாட்சியிலிருந்து சிவகங்கைச் சீமைத் தலைவர்களுக்கு அனுப்பிய ஓலைகளுக்கு நல்ல பலன் கிடைத்தது. சிவகங்கை மக்கள் பலர் சிறு சிறு குழுக்களாக ஆயுதங்களுடன் விருப்பாட்சி போய்ச் சேர்ந்தனர். அவர்கள் ராணியிடம் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். எட்டு ஆண்டுகள் கடந்த நிலையில் ராணியின் முயற்சி வெற்றி அடையத் தொடங்கியது. ஆங்கிலேயரையும் ஆற்காட்டு நவாபையும் அழித்தொழிக்கும் திட்டம் ஒன்றை உருவாக்கி அதைச் செயல்படுத்தவும் ஹைதர் அலி ஆயத்தமானார். சிவகங்கைச் சீமையை ஆற்காடு நவாபின் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பதற்கு உதவும் படைகளைத் திண்டுக்கல் கோட்டை வந்து பெற்றுக்கொள்ளுமாறு ராணிக்கு செய்தி அனுப்பினார். குறிப்பிட்ட நாளன்று ராணி வேலு நாச்சியார், மருது சகோதரர்கள் வழிகாட்டுதலில் ஹைதர் அலி வழங்கிய குதிரைப்படைகள் சிவகங்கையை நோக்கிச் சீறிப்பாய்ந்தன.

மதுரைக்கருகில் ‘கோச்சடை’ என்னுமிடத்தில் நவாபின் படைகளும் கும்பெனிப்படைகளும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தித் தாக்கின. ராணியின் படைகள் நவாபின் படையைத் தவிடுபொடியாக்கியதுடன் மானாமதுரை வைகையாற்றுப்பகுதியில் கும்பெனிப்படைகளைத் தாக்கி அவை ஓடி ஒளியுமளவிற்குச் சண்டையிட்டு வெற்றி பெற்றன. பின்னர் வேலுநாச்சியார் தனது படைகளைச் ‘சிவகங்கைப் பிரிவு’, ‘திருப்பத்தூர் பிரிவு’,’காளையார் கோயில் பிரிவு’ என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்தார். அம்முப்படைப் பிரிவை அனுப்பி மும்முனைத் தாக்குதல் நடத்தி நவாபின் படைகளை எளிதில் வெற்றி கண்டார்.

வேலுநாச்சியார் தலைமையில் பெண்கள் படை அரண்மனைக்குள் நுழைந்து தளபதி பான் ஜோர் படையைச் சந்தித்தது. மாறுவேடத்தில் பொதுமக்களோடு கலந்து கோயிலுக்குள் நுழைந்தது ராணியின் படை. திட்டமிட்டப்படி படையைச் சார்ந்த குயிலி எனும் பெண் தம் உடம்பெல்லாம் நெய்யூற்றி தீவைத்தபடி வெள்ளையரின் ஆயுதக்கிடங்கில் குதித்தாள். குயிலியோடு கும்பெனியின் அனைத்துப்படைகளும் எரிந்து முடிந்தன. விடுதலைப்படையை எதிர்கொள்ளமுடியாமல் வெள்ளையர் படை விழி பிதுங்கியது. வேலுநாச்சியார் வாளேந்தி பான் ஜோரை எதிர்கொண்டு ஒருநிமிடத்தில் அவரை மண்டியிடச்செய்தார்.

"வெள்ளையருக்கு எதிராக வாளெடுத்து வீரப்போர் புரிந்த முத்தவடுகநாதரின் மனைவி வீரமங்கை வேலுநாச்சியார் அன்று நடத்திய சிறப்பு வாய்ந்த வீரப்போர் வாயிலாக வேங்கடத்திற்கு வடக்கே ஒரு ஜான்சி ராணி தோன்றுவதற்கு முன்பே தமிழகம் தன் ஜான்சிராணியைக் கண்டுவிட்டது. என்று வரலாற்று ஆசிரியர்கள் போற்றும்படி செய்துவிட்டாள். (மு.பாலகிருஷ்ணன், விடுதலைப்போரின் விடிவெள்ளிகள், ப.61)

வெற்றி பெற்ற வேலுநாச்சியாரும். இளவரசி வெள்ளச்சி நாச்சியாரும், மருது சகோதரர்களும் சிவகங்கைக் கோட்டைக்கு வந்து சேர்ந்தனர். மக்கள் கூட்டம் அவர்களை மகிழ்வுடன் வரவேற்று வாழ்த்தி வணங்கியது. 1780 ஆம் ஆண்டு ராணியார் தனது மகள் வெள்ளச்சி நாச்சியாருக்கு அரசியாக முடிசூட்டி, பெரிய மருதுவைத் தளபதியாகவும், சின்ன மருதுவை முதலமைச்சராகவும் நியமனம் செய்தார். வெள்ளச்சி நாச்சியாரின் பிரதிநிதியாக இருந்து வேலுநாச்சியாரே சிவகங்கையை 1780 ஆம் ஆண்டு முதல் ஆட்சிசெய்து வந்தார்.

"எட்டாண்டு காலம் தவமிருந்து, படை நடத்தி, ஆயுதம் ஏந்தி, களம் கண்டு ஆங்கிலப்படைத்தளபதிகள் ஜேசப் ஸ்மித், பான் ஜோர் ஆகியோரை அந்தத் தமிழச்சி தோற்கடித்திருக்கிறாள். இந்த சாகசங்களை நிகழ்த்தியபோது அவளுக்கு வயது 50" (கே.ஜீவபாரதி, வீரன் எட்டப்பன் முதல் வேலுநாச்சியார் வரை, ப.125) பல்வேறு சோதனைகளுக்கிடையே ராணி வேலுநாச்சியாரின் பத்தாண்டுகால ஆட்சி 1789 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. 1800 ஆம் ஆண்டு வீரமங்கை வேலுநாச்சியார் இம்மண்ணுலகை விட்டு மறைந்தார்.

**மக்கள் புரட்சியில் மருதுசகோதரர்கள்**

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிவகங்கைச் சீமையின் வரலாறு, பெருமைமிகு வரலாறாக இருந்தது. தமிழகத்தில் ஆங்கிலேயரை வீரமுடன் எதிர்த்து, வெள்ளையர் ஆட்சிக்கெதிராக மக்களைத் திரட்டிப் போராடிய பெரிய மருதுவும் அவரது சகோதரர் சின்ன மருதுவும் தமிழக வரலாற்றில் விடுதலைப்போரை தொடங்கி வைத்தவர்களாவர். விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 'அழகாபுரி முக்குளம்' என்னும் குக்கிராமத்தில் 'உடையார் சேர்வை' என்ற மொக்கப் பழனியப்பன் சேர்வைக்கும், ஆனந்தாயி என்ற பொன்னாத்தாள் தம்பதியினருக்கும் 1748 ஆம் ஆண்டு பெரியமருது

தலைமகனாகப் பிறந்தார். இவர் பிறந்த ஐந்தாண்டுகளுக்குப் பின்னர், 1753 ஆம் ஆண்டு இளையமகன் சின்னமருது பிறந்தார். மொக்கப் பழனியப்பன் மருதிருவரைப் பள்ளியில் சேர்த்து கல்வி பயிலச்செய்தார். எனினும் அவர்கள் பள்ளிப்படிப்பைக் காட்டிலும், படைக்கலப்பயிற்சியில் அதிக ஆர்வம் காட்டினர்.

**பெரிய மருது**

உயர்ந்த கற்சிலை போன்றது பெரிய மருதுவின் தோற்றம். தூண்களைப்போன்ற கைகள், அடர்ந்த புருவம், படர்ந்த மீசை, உயர்ந்த தோள்கள் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் பெரியமருதுவைப் பார்த்த யாருக்கும் அவரது தோற்றம் மிகுந்த அச்சத்தைத் தரும். அவர் விலங்குகளை வேட்டையாடுவதில் மிகச்சிறந்த வீரர். அக்காலத்தில் தமிழகத்தில் புழக்கத்தில் இருந்த “ஆற்காடு ரூபாய்” என்ற நாணயம் மிகவும் உறுதிவாய்ந்தது. அந்நாணயத்தை, ஒரு நொடியில் வலிமையான தனது கை விரல்களினால் வளைக்கக்கூடிய வலிமை அக்காலத்தில் பெரிய மருதுவிற்கு மட்டுமே இருந்தது.

**சின்னமருது**

சின்ன மருது, கருத்த மேனியாய் எழில் குன்றாது திகழ்ந்தார். குள்ளமான உருவம், கூரிய அறிவு, பரந்த நோக்கம், படர்ந்த மீசை ஆகியவை சின்ன மருதுவின் வீரத்தை மிகச்சிறப்பாக எடுத்துக்காட்டின. ஒரு நாட்டையே சிறப்பாக ஆளக்கூடிய திறமையும், சிறப்புத் தன்மைகளும் சின்னமருதுவிடம் காணப்பட்டன. இவர் வேட்டை நாய்களைப் பழக்கி, மிருகங்களை வேட்டையாடப் பயிற்சி கொடுப்பதிலும், குதிரைகளின் தரமறிந்து அவற்றிற்குப் பயிற்சி கொடுத்துப் பழக்குவதிலும் மிகுந்த திறமை பெற்று விளங்கினார்.

**மருது பாண்டியரின் வீரமும் தீரமும்**

சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர் மிகச் சிறந்த வேட்டைப்பிரியர். அவர் அடிக்கடி தனது பரிவாரங்களுடன் காட்டுக்கு வேட்டையாடச் செல்வார். அச்சமயங்களில் மருது சகோதரர்களையும் உடன் அழைத்துச்செல்வார். ஒருசமயம் வேட்டையின்போது புலியொன்று மன்னர் மீது சீறிப்பாய்ந்தது. அனைவரும் பயந்து நடுங்கிச் செய்வதறியாது திகைத்து நின்றனர். உடனே பெரிய மருதுவும் சின்ன மருதுவும் வேங்கைப்புலி மீது

பாய்ந்து வேல்கொண்டு புலியைக் குத்திக் கொன்றனர். மன்னர் உயிர் தப்பினார். அவர் மருது சகோதரர்களுக்குப் பரிசுகள் கொடுத்து, பதவிஉயர்வும் கொடுத்து அவர்களைக் கௌரவித்தார். மருது சகோதரர்கள் சேனையின் தளகர்த்தர்களாக நியமிக்கப்பட்டனர்.

**வளரி வீசுவதில் வல்லவர்கள்**

அக்காலத்தில் “வளரி” என்பது எதிரியை வீழ்த்தப் பயன்படுத்தப்பட்ட ஒரு மரஆயுதம். ஒருவர் வளரிக்கம்பினை, எதிரியின் மேலெறிந்தால், அது எதிராளியைத் தாக்கி வீழ்த்திவிட்டு, மீண்டும் எறிந்த நபரிடமே திரும்பி வரும் இயல்புடையது. (NOOMERANG) அச்சமயத்தில் திரும்பி வரும் வளரியை, எறிந்தவர் மிகுந்த கவனத்தோடு மீண்டும் கையில் பிடிக்கவேண்டும். சிறிது கவனம் பிசகினாலும் எறிந்த நபரையே அது தாக்கி அழித்து வீழ்த்திவிடும் தன்மை கொண்டது. அக்காலத்தில் புழக்கத்தில் இருந்த அத்தகைய பயங்கரமான ஆயுதம் வளரியை வெகு திறமையாகக் கையாள்வதில் மருதுபாண்டியர் இருவருமே சிறந்த பயிற்சி பெற்றிருந்தார்கள்

“பெரிய மருது ஓடுகின்ற முயலைக்கூட வளரிக்கம்பால் அடித்துவிடுவார் என்று ஆங்கிலக் கும்பெனிப் படைத்தளபதி, மேஜர் ஜேம்ஸ் வெல்ஷ் மருதுவின் வளரி வீசும் திறமையைப் பாராட்டி கூறியுள்ளார். மேலும் இவர், சின்ன மருது தனக்கு வளரி எறிவதைக் கற்றுக் கொடுத்ததாக ‘ராணுவ நினைவுகள்’ என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்”. (மு.பாலகிருஷ்ணன், விடுதலைப்போரின் விடிவெள்ளிகள், ப.61)

இவ்வாறு அனைத்து நிலைகளிலும் மிகச்சிறந்தவர்களாகவே மருது சகோதரர்கள் விளங்கினர்.

**சிவகங்கை நிர்வாகப் பொறுப்பு**

மதுரைக்கருகிலுள்ள ‘கோச்சடை’ என்னுமிடத்தில் நவாபின் படைகளும், கும்பெனிப்படைகளும் தடைகளை அமைத்து ராணியின் படைகளைத் தாக்கின. வேலுநாச்சியார், மருதுசகோதரர்கள் போர்த்திறமையால் அப்படைகளை வெற்றி கண்டு சிவகங்கை வந்து சேர்ந்தனர். சிவகங்கையில் மக்கள் கூட்டம் அவர்களை மகிழ்வுடன் வரவேற்று வாழ்த்தியது. வேலுநாச்சியார் தனது கணவனை இழந்துவிட்டதாலும், இளவரசி கன்னிப்பெண்ணாக இருந்ததாலும், உயர்குடிப்பிறந்த அரசகுலப்பெண்கள்

ஆட்சி மற்றும் நிர்வாகத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள இயலாத சூழல் அக்காலத்தில் நிலவியது. எனவே மருது சகோதரர்கள் சிவகங்கைச்சீமையின் நிர்வாகத்தை திறம்பட நடத்தி வந்தனர்.

**ஆங்கிலேய எதிர்ப்பு**

பெரிய மருது பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மனுடன் தொடர்பு வைத்துள்ளார் என்று கும்பெனி அவர்மேல் குற்றம் சாட்டியது. அதனால் மருதுவின் படைகளுக்கும், கும்பெனிப் படைகளுக்கும் 1799 இல் ‘பழமனேரி’ என்னுமிடத்தில் ஒரு போர் நடைபெற்றது. அப்போரில் மருதுவின் படைகளுக்குப் பக்கபலமாகப் புரட்சி வீரர்கள் கட்டபொம்மன் மற்றும் மைலப்பன் கலந்துகொண்டு போரிட்டனர். கும்பெனிப்படை பின்வாங்கியது.

ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்ததற்காகச் சின்ன மருது மேல், கலெக்டர் லூஷிங்டன் ஆத்திரமும் கோபமும் கொண்டார். 1801 ஆம் ஆண்டு ஒரு பிரகடனத்தை வெளியிட்டு அதில் ‘சின்ன மருது மற்றும் அவரது கூட்டாளிகளுடன் யாரும் தொடர்பு கொண்டிருந்தால் அவர்களது கோரிக்கை தடுக்கப்பட்டு அவர்கள் குற்றவாளிகளாக கருதப்படுவார்கள்’ என்று அறிவித்தார். இவ்வாறு ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்ததற்காக ஆங்கிலேயர் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தனர். பெரியமருதுவுக்குத் தெரியாமல் இக்காரியம் நடைபெறுவதாக கர்னல் அக்னியூ கருதினார். இதன்மூலம் மருதுசகோதரர்களுக்கிடையே பேதத்தையும் பிரிவினையையும், கருத்து வேறுபாட்டையும் ஏற்படுத்தி அவர்களுக்குள் பகையை ஏற்படுத்த ஆங்கிலேயர்கள் முயற்சிசெய்தனர். இவ்வாறு எல்லா வகையிலும் ஆங்கிலேயர்களின் தொல்லை அதிகரித்தது.

இந்நிலையில் சின்னமருது ஒரு வரலாற்று புகழ்மிக்க ‘ஜம்புதீவப் பிரகடன’த்தை உருவாக்கினார். இப்பிரகடனம் இந்தியாவின் ஒற்றுமைக்கும், மதங்களின் இணைப்புக்கும் அறைகூவல் விடுத்த முதல் ஆவணமாகும். அது ஓர் இனத்தின் குரலாகவும், அந்நியசக்தியின் ஆதிக்க சர்வாதிகாரத்தை எதிர்த்துப்போராட, ஒடுக்கப்பட்ட ஓர் இனத்தின் உரிமைக்குரலாகவும், இந்திய வரலாற்றில் முதன்முதலாக வெளிவந்த ஒரு அறைகூவலாகவும் இது கருதப்படுகிறது. இவ்வாறு பல சூழல்களில்

பல்வேறு போர்க்களம் கண்ட மருது சகோதரர்கள் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டனர். அச்சூழலிலும் 'ஒருநாள் எனது தாய்நாடு அன்னிய மாயை ஒழிய, அடிமை விலங்கை அறுத்தெறிந்து தலைநிமிர்ந்து நிற்கும்' என முழங்கினர். 1801 ஆம் ஆண்டு மருது சகோதரர்கள் உள்ளிட்ட விடுதலைப்போராட்ட வீரர்கள் வெள்ளை ஏகாதிபத்தியத்தால் தூக்கிலிடப்பட்டு வீரமரணமடைந்தனர். மருதுபாண்டியர்கள் இந்திய திருநாட்டின் விடுதலைக்காகப் போராடிய தியாகச் செம்மல்கள் ஆவர்.

**தொகுப்புரை**

சித்ரவதை, சிறைவாழ்க்கை, உயிர் இழப்பு, உறவுகள் பாதிப்பு என இந்தத் தேசவிடுதலைக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்தோர் பட்டியல் மிக நீண்ட நெடியதாகும். அதனால்தான் பாரதியார்,

"தண்ணீர் விட்டா வளர்த்தோம்?

சர்வேசா! இப்பயிரைக்

கண்ணீரால் காத்தோம்

கருகத் திருவுளமோ?

என்று குறிப்பிட்டார். அத்தகைய தியாக சீலர்களைக் கண்ட வீரத்தின் விளைநிலமாகச் சிவகங்கைச்சீமை அமைந்துள்ளது. முத்துவடுகநாதர், ராணி வேலுநாச்சியார், மருது சகோதரர்கள், குயிலி போன்றோர் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராகத் தங்கள் இன்னுயிரை ஈந்து விடுதலைப் பயிரை வளர்த்துள்ளனர். இவர்களின் வரலாறும் போராட்ட வாழ்க்கையும் ஒவ்வொரு தமிழனும் பெருமிதம் கொள்கின்ற வீரத்தின் சுவடுகளாகத் தடம் பதித்துள்ளன.

**துணைநின்ற நூல்கள்**

1.பாலகிருஷ்ணன்.மு, விடுதலைப்போரின் விடிவெள்ளிகள், சுரா புக்ஸ், சென்னை 40, முதல்பதிப்பு, மே 2001.

2.ஜீவபாரதி. கே., வீரத்தாய் வேலுநாச்சியார், குமரன் பதிப்பகம், சென்னை 17, முதல்பதிப்பு, ஏப்ரல் 2005.

3.ஜீவபாரதி.கே, வீரன் எட்டப்பன் முதல் வேலுநாச்சியார் வரை, ராஜேஸ்வரி புத்தக நிலையம், சென்னை 17, முதல்பதிப்பு,2002.

4.பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை 08, முதல் பதிப்பு, 2004.